# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.</u>

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி. சரோஜா | அசல் வழக்கு எண். | 99/2018 |
| த/பெ. | - | | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

27.01.2026

## <u>முதல் விசாரணை:</u>

நான் எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் சொன்னத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். 18.01.1973 தேதியிட்ட ஐயம்பெருமாள் என்பவர் வாதிக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் சாசனம் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.11.2018 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( பி.சா.ஆ.2 கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதால் வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 13.02.1991 தேதியிட்ட வாதியும் அவரது கணவரும் அன்னபூரணி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரையப் பத்திரம் கணினி நகல் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பி.சா.ஆ.3 நீதிமன்ற சான்றிட்ட நகலாக தாக்கல் செய்து அச்சு சரியாக இல்லாததால் கணினி நகல் இணைக்கப்பட்டது). 06.01.2023 தேதியிட்ட எனது பெயரிலுள்ள மின் கட்டண இரசீது **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.01.2024 தேதியிட்ட எனது பெயரிலுள்ள வீட்டு வரி இரசீது **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்று வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.27 16:52:47 +0530

வாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.27 16:52:55 +0530

District Munsif

Vanur.